REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—6 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

6 ஆண்டுகளில் கிடைத்தது இதுதான்!

புதுடில்லி, ஆக. 1—

தமிழ் நாட்டிற்கு, உணவுப் பெருக்கத் திட்டங்கள் நீங்கலாக மற்றத் திட்டங்களுக்கு 1951—52 முதல் இன்று வரை மத்திய அரசாங்கம் தந்துள்ள மொத்தக் கடன் ரூ. 27 கோடியே 34 இலட்சம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1956—57-ல் சென்னை மாநில மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அனுமதித்துள்ள ரூ. 35. இலட்சமும் இத்தொகையில் சேர்ந்துள்ளது.

மலர் 5] சென்னை: ஆடி 17௳ வியாழன் (1—8—57) ★ ★ வெளியூர்: ஆடி 18௳ வெள்ளி (2—8—57) [இதழ் 40

'தென்னகம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது'

'தென்னகத்திற்காக தனி நிதி அமைப்பு தேவை'

'தென் இத்தாலியை முன் மாதிரியாகக் கொள்க'

'டில்லியை மண்டலக் குழு நெருக்கவேண்டும்'

ஆசிரியர் தா கோஸ்த்தா கருத்துரை

சென்னை, ஆக. 1—

"நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கின்ற தென்னகத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, தென் இத்தாலிக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது போன்ற முறையில், தென்னிந்தியாவிற்கும் தனி வளர்ச்சி நிதி ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்."

இக்கோரிக்கையை, 'ஈஸ்டர்ன் எகனமிஸ்ட்' என்ற ஆங்கில ஏட்டின் ஆசிரியராக இருந்துவரும் ஈ. பி. டபிள்யூ. தா கோஸ்தா என்பவர் வெளியிட்டுள்ளார்.

தென்னிந்திய வியாபார சங்கக் கட்டிடத்தில், அந்த நிறுவனத்தின் சார்பில் நேற்று மாலை நடைபெற்றக் கூட்டத்தில் மேற்படி ஆசிரியர் பேசும்பொழுது, வெளி நாட்டுச் செலாவணி நிலைமைப் பற்றியும், நாட்டை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்ற பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்தும் தெளிவுபடுத்தினர்.

"தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருப்பதானது—இது ஒன்றும் புதிய பிரச்னை அல்ல; கடந்த ஐம்பதாண்டுகளாக - என் - அதற்கும் கூடுதலாக தென்னகம் ஒதுக்கப்பட்டு வந்திருக்கின்றது என்பதே என் கருத்து—பலத்த அரசியல் விளைவுகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. சென்ற இரண்டு மூன்று ஆண்டுக்காலமாகவே, தென்னாட்டுப் பிரச்சினைகளில் ஈடுபாடு கொள்ளக் கூடிய ஆய்வுக் குழு ஒன்றை திட்டக் குழுவில் உருவாக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தி வந்திருக்கின்றேன். நான் இதைத் திரைமறைவில் செய்துள்ளேன்" என்றும் அவர் கூறினர்.

தென் இத்தாலியின் பொருளாதார வளத்திற்காக தனித்த நிதி அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பது போன்று தென்னிந்தியாவின் முன்னேற்றத்திற்கும் ஏற்படுத்த வேண்டும் என்ற தனது கருத்தை வலியுறுத்த அவர், இத்தாலியில் கத்தோலிக்க ஜனநாயகக் கட்சி அதிகாரத்திற்கு வந்ததும், அதற்குமுன் நடைபெற்ற தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து, 'சிசிலியில் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதிக்கம் பரவினதற்கு அங்கிருந்த பயங்கரமான வறுமையே காரணம் எனக் கண்டறியப்பட்டது' என்று எடுத்துக் காட்டினர்.

தென்னகத்தின் முன்னேற்றத்திற்காக தனித்த நிதி அமைப்பை ஏற்படுத்தும் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் நிலையில் டெல்லி இருப்பதாக அவர் கருத்தறிவித்தார்.

"1953—54-ம் ஆண்டில் முப்பது இலட்சம் டன்னும், 1954—55-ல் இருபது இலட்சம் டன்னும் உபரியாக உற்பத்தியாகி இருப்பதாக உணவு தானிய உற்பத்தி, விளக்கம் தருகிறது. உணவு தானிய நிலைமை, இரண்டாவது திட்டத்தில் தவருகக் குறிக்கப்பட்டிருக்கிறது என நான் கருதுகிறேன். இவ்வாறு செய்துள்ளதற்கு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து பெற்ற ஒருவகை போக்கை உருவாக்கினதே காரணம். ஆனல் அதற்கு நடைமுறை பொருளாதார நிலைமைகளில் எந்த வித ஆதாரமும் இல்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

பேச்சின் முடிவில் அவரிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவ்வாறு கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்றுக்கு, 'இறக்குமதி செய்யப்பட்டுள்ள கோதுமையை, இன்றைய அங்காடி விலைக்கு 10 சதவிகிதம் குறைவாக விற்பதின் மூலம் வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

தென்னிந்திய வியாபார சங்கத்தின் சார்பில் நன்றி அறிவித்தவர், தென்னிந்தியாவிற்கு தனித்த நிதி அமைப்பைக் காணும் ஆசிரியரின் கருத்தை ஆதரித்தும், இக்கோரிக்கையை தென்னக மண்டலக் குழு டில்லியிடம் வற்புறுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

'எதிரியின் தொல்லையைத்தவிர்க்கவே எல்லை வேண்டும் என்கிறோம்'

'வடக்கும் தெற்கும் ஒன்ருக முடியுமா?'

'பாரதம் ஒன்றென்போர் ஆசியாவை ஒன்றெனக் கூருதது ஏன்?'

மயிலை சிந்தனையாளர்களிடை அண்ணு

"'இந்தியா ஒன்று' என்கிருர்கள்; திராவிட நாடு தனி நாடாகிவிடுவதினல், 'இந்தியா ஒன்று' என்ற நிலை எப்படி மாறி விடப்போகிறது? 'எதிரியின் தொல்லை கூடாது' என்பதற்குத்தானே 'எல்லை வேண்டும்' என்கிறோம்! நம்முடைய வாழ்வு சிறக்க, நாம் முழு உரிமை படைத்தவர்களாயிருக்கவேண்டும்—நாம் விரும்பும் தொழில் திட்டங்களை நாமே நிர்மாணித்துக்கொள்ளுகிற அதிகாரம் நமக்கு வேண்டும்—இந்த நாட்டின் தட்பவெட்ப நிலைக்கேற்றபடி மக்களின் வாழ்வை அமைக்கவும், நமக்கேற்ற ஒரு வரித் திட்டத்தை ஏற்படுத்திக்கொள்ளவும், நமது வரிப் பணத்தையும் செல்வத்தையும் வடநாடு வாரிக்கொண்டு போகாமல் இருக்கவும் தானே, நாம் நமது நாடு நம்மிடம் இருக்கவேண்டும் என்கிறோம்!

"'வீட்டுக்கு வீடு கதவு வேண்டும்' என்பது, அண்டை வீட்டானுடன் பகை கொண்டிருக்கிறோம் என்பதினல் அல்லவே! அதுபோலத்தான், 'நமது வாழ்வைக் கவனித்துக்கொள்ளும் அதிகாரம் நம்மிடம் இருக்கவேண்டும்; டெல்லியிடம்—வடநாட்டிடம் கூடாது' என்கிறோம்.

"'இந்தியா ஒன்று' என்கிருர்கள்! என்றிலிருந்து ஒன்ருக இருக்கிறது? நாமும் வடவரும் என்றைக்கு ஒன்ருக வாழ்ந்தோம்? இராமாயண காலத்தில் வாழ்ந்தோமா? அந்தக் காலத்தில்கூடக் கிடையாதே! இன்று, ஒன்ருக நாம் இல்லை—ஆனல், ஒன்ருக ஆக்கப்பட்டிருக்கிறோம்; என்ருலும், இன்னும் ஒன்ருக ஆகிவிடவில்லை; எப்படி ஒன்ருக ஆகமுடியும்? ஒன்ருக ஆக்கப்படுவது வேறு—ஒன்ருக ஆவது வேறு! வடவருடன் நம்மை ஒன்ருக ஆக்கிவிடவேண்டும் என்று நினைக்கிருர்கள்; அதற்காக, அரசாங்கத்தின் மூலமாக நம்மை ஒன்ருக்கி வைத்திருக்கிருர்கள்; அவ்வளவுதான்!

"ஆச்சாரியாரே சொல்லியிருக்கிருரே—'ஒரு நாட்டில் காணப்படும் கலாச்சாரம் அல்ல; ஒரு கண்டத்தில் காணப்படும் (பல நாட்டு) கலாச்சாரத்தைத்தான் இந்தியாவில் காணமுடிகிறது'—என்று! அப்படி, நம்மிலிருந்து வேறுபட்ட கலாச்சாரத்தைக் கொண்ட வடவருடன் நாம் எப்படி ஒன்ருக ஆகிவிடமுடியும்?

"வெள்ளையனை எதனல் அன்னியன் என்ருேம்; அவனது மொழி, நடைநொடி பாவனை, நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடு இவை நம்மிலிருந்து வேறுபட்டனவாயிருந்ததால் அவனை அன்னியன் என்ருேம்; அதேபோலத்தான் வடவரும் நமக்கு அன்னியர்.

"நமக்கும் வெள்ளையனுக்கும், ஜெர்மனியனுக்கும் ஆஸ்திரேலியாக்காரனுக்கும், அமெரிக்கனுக்கும் எவ்வளவு வேற்றுமைகள்—வேறுபாடுகள் உண்டோ, அவ்வளவு வேற்றுமைகளும் வேறுபாடுகளும், நமக்கும் வடநாட்டவருக்கும் உண்டு. அப்படியிருக்க, 'இமயம் வரை குமரி வரை இந்தியா ஒன்று' என்ருல் எப்படி ஒப்பமுடியும்?

—இவ்வாறு அண்ணு அவர்கள், சென்னை—மயிலையில், சிந்தனையாளர் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டு விட்டு, மேலும் பேசியதாவது:—

(4-ம் பக்கம் பார்க்கவும்)

பயங்கர வாண வெடி விபத்து

4-மைல் தூரத்திற்கும் ஓசை கேட்டதாம்!!

அசன்சால், ஆக. 1—

நேற்று காலை அசன்சால் இரயில் நிலயத்தில் வாண வெடிகள் இருந்த ஒரு பெட்டி தீப்பிடித்துக்கொண்டதாகவும், இதனல் 13 பேர் மரணமடைந்தனர் என்றும், 50 பேர் காயமடைந்தனர் என்றும், சாமான்கள் இறக்கும் பகுதி தகர்த்தெறியப்பட்டதாயும், பக்கத்தில் இருந்த சில வாகன்களும் தீப்பிடித்துக்கொண்டன என்றும், இந்தப்பயங்கர வாணவெடி ஓசை 4 மைல் தூரத்திற்குக் கேட்டது என்றும், முகாம் பண்டிகையை முன்னிட்டு இந்த வாண வெடிகள் வந்துள்ளன என்றும் தெரிய வருகிறது.

கேட்டது வாழ்க்கை-கிடைத்தது சாவு!

நகரசுத்தி தொழிலாளர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம்

புதுடில்லி, ஆக. 1—

ஊதியம் போதவில்லை—உயர்வு வேண்டும், கிராசுடி வேண்டும்; வைத்திய வசதி தாருங்கள்; இலவச வீடு கொடுங்கள்; கிராக்கிப்படியை ஊதியத்துடன் இணைத்து விடுங்கள்!

இதுதான், புதுடில்லி நகராட்சி மன்றத்தைச் சேர்ந்த 2,000 நகர சுத்தித் தொழிலாளர்களின் கோரிக்கையாகும்.

அவர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்கள் கடந்த 30-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். நகராட்சி மன்ற அலுவலக வாயிலில் ஒரு பெண் உள்பட 12 பேர் பட்டினி கிடந்து வருகிருர்கள். அவர்களின் தலைவர் கைது செய்யப்பட்டு லாரியில் ஏற்றிச்சென்ற நோத்தில், அதனைத் தொழிலாளர்கள் தடுத்ததை ஒரு காரணமாகக் கொண்டு போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்!

இதில் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்றும், மூவர் காயமடைந்துள்ளனர் என்றும்தெரிய வருகிறது.

விற்பனை வரி விலக்கு

சென்னை, ஜூலை 31—

புத்தகங்களுக்கு 1-8-57 முதல் விற்பனை வரி விலக்கு அளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 1—8—57 வியாழன்

அஞ்சல் ஊழியர் அறப்போர்

★

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளைக் குறித்து திட்டக் குழுவும், பேரரசின் அமைச்சர்களும் வானளாவப் புகழ்ந்து பேசி வருகின்றனர். அச்சாதனைகளுக்காகத் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்ளவும் செய்கின்றனர்.

முதல் திட்டத்தின் விளைவாக துறைகள் அனைத்திலும் பொருள் உற்பத்திப் பெருகி இருக்கின்றது எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. அது ஓரளவிற்கு உண்மையுமாகும்.

ஆனால் அக்குறைந்தபட்ச பொருள் உற்பத்திப் பெருக்கத்தைக் கண்டு, மேலும் மேலும் தங்கள் ஒவ்வொருவரையும் கூனிக்குறுகச் செய்துவரும் பண்டங்களின் விலையேற்றச் சுமையைப் பொதுமக்களால் மறந்திருக்க முடியவில்லை. பண்டங்களின் விலையேற்றம் தரும் வேதனையின் காரணமாக, பொதுமக்கள் வாய்விட்டுக் கதறிக் கொண்டுள்ளனர்.

முதல் திட்டத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாக தேசத்தின் மொத்த வருமானம் உயர்ந்திருக்கின்றது என்று கூறி, அதற்குரிய புள்ளிவிவரத்தைப் பெருமையாகக் காட்டி, பொதுமக்களின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிகின்றதா என்று பார்க்கிறது இந்தியப் பேரரசு. ஆனால் தேசிய வருமானம் உயர்ந்திருக்கின்றது என்றுதான் அரசாங்கப் புள்ளிவிவரம் குறிப்பிட்டிருக்கின்றதே அல்லாது, தனி நபர்களின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடக்கூடிய வகையில், அவர்கள் ஒவ்வொருவருடைய வருமானமும் முன்னிலும் இன்று உயர்ந்திருக்கின்றது என்பதற்கான புள்ளிவிவரத்தை அரசாங்கம் இதுவரை காட்டவில்லை. அதற்கான புள்ளிவிவரம் அரசாங்கத்திடம் இல்லவுமில்லை. உண்மையில் தேசிய வருமானம் உயர்ந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு, தனித்தனி மக்களின் வருமானம் உயரவே இல்லை.

இந்த நிலையில் இரண்டாவதுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அதன் பெயரைக் கூறி இந்தியப் பேரரசு, நேரடியாகப் பொது மக்களைப் பாதிக்கின்ற முறையில், வரிமேல் வரிகளைப் போட்டுள்ளது. இதன் பலனாக, பொது மக்கள் உயிர் வாழ்ந்து வருவதற்கு இன்றியமையாத் தேவையாக உள்ள பண்டங்களின் விலை முன்னிலும் மிகுதியாகக் கூடிவிட்டது.

அவ்விலை உயர்வைக் கொடுத்து தேவைக்கேற்பப் பண்டங்களை வாங்கி பயன்படுத்துகின்ற ஆற்றல்—பணபலம்—வாங்கும் சக்தி மக்களிடம் இல்லை. எனவே, தாங்கள் உயிர்வாழ்வதற்கான இன்றியமையாதுத் தேவைப்படும் பண்டங்களை, ஏற்கனவே வாங்கி வந்த அளவிலும் குறைந்தபட்ச அளவில் வாங்கிப் பயன்படுத்தவேண்டிய கட்டாயத்திற்கு மக்கள் வந்துவிட்டனர்.

விளைவு, விபரீதமானது. துன்பத்தைத் துடைத்துக்கொள்ள வழி இல்லை. வறுமையில் வாடிக் கிடக்கின்றனர் என்பதுடன், வாய்மூடி வேதனையைத் தாங்கிக்கொண்டும் உள்ளனர் பொதுமக்கள்.

வேதனையைத் தாங்கிக் காலங்கழித்துவரும் பொதுமக்களின் அவலநிலையைப் போக்க வேண்டுமே என்ற நல்லெண்ணம் அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை. ஆறுதல் கூறவேண்டுமே என்ற பெரும் குணம்கூட அரசாங்கத்திற்கு இதுவரை ஏற்படவில்லை.

இதோ, அஞ்சல்-தந்தி ஊழியர்கள் போர்க் குரல் எழுப்பி உள்ளனர். தங்கள் ஊதியத்தை உயர்த்தவேண்டும் என்கின்றனர். கொடுத்து வரும் பஞ்சப்படியை அடிப்படை சம்பளமாக மாற்றி அமையுங்கள் என்கின்றனர். நான்காம் வகுப்பு மூன்றாம் வகுப்பு ஊழியர்களிடை இருந்துவரும் குறிப்பிட்ட சில வித்தியாசங்களை நீக்கக் கோருகின்றனர். மத்திய அரசாங்க ஊழியர்களிடை வேலை நேரம், விடுமுறை போன்றவற்றில் இருந்துவரும் வேற்றுமைகளைக் களைய கோருகின்றனர். இரண்டாவது சம்பளக் குழு நியமிக்க வேண்டும் என்றும் வேண்டுகின்றனர்.

மேற்படி கோரிக்கைகளுக்கு இந்தியப் பேரரசு இணங்க மறுக்கும்பட்சத்தில் ஆகஸ்ட் 8-ந் தேதி இரவு பன்னிரண்டு மணி முதல் கொண்டு வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளப் போவதாக, இரண்டரை இலட்சம் அஞ்சல்-தந்தி ஊழியர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கிவரும் ஊழியர் நிறுவனம் அரசாங்கத்திற்கு அறிவித்துவிட்டது. அரசாங்கமும் அதுகண்டு அலறத் தொடங்கியுள்ளது.

பண்டங்களின் விலையேற்றத்தின் காரணமாக கொடிய வறுமையில் உழன்று கொண்டிருக்கும் மக்களை அலட்சியப்படுத்தி வருவதுபோல், அஞ்சல்-தந்தி ஊழியர்களின் அறப்போராட்ட அறிவிப்பை அலட்சியப்படுத்திவிட முடியவில்லை அரசாங்கத்தால்!

பண்டங்களின் விலை ஏற்றத்தால் மக்களின் வளைந்துபோன வாழ்வை நிமிர்த்த வேண்டுமே என்ற கவலை துளியும் கொள்ளாத அரசாங்கம், அஞ்சல்-தந்தி ஊழியர்கள் அறப்போர் எச்சரிக்கைக் கண்டு துடியாய்த் துடிக்கிறது. அவ்வூழியர்களின் அறப்போர் குறித்து மயக்குரை பகர்கிறது அரசாங்கம்.

அஞ்சல்-தந்தி ஊழியர்களின் கோரிக்கை நியாயமானது; நேர்மையானது. அதை ஒப்புக் கொள்ளுகிறது அரசாங்கம். இருந்தாலும், அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்க மறுக்கின்றது. அவ்வாறு மறுப்பதற்கு நியாயம் எதுவும் இல்லை.

‘தீண்டாமை ஒழிப்பு: பிரச்சினையை சர்க்கார் அணுகும் முறையே தவறானது’

‘யாரோ சிலர் எதிர்த்தார்கள் என்பதால் நல்லதொரு திட்டத்தைக் கைவிட்டது ஏன்?

‘தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் தாமதமாவது எதனால்?’

தோழியர் சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை சட்டசபையில், அரிசன இலாகா மானிய வெட்டுப் பிரேரணையை முன்மொழிந்து தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

“அரிசன இலாகா மானியத் தொகையைக் குறைக்கவேண்டும் என்பதற்காக நான் வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வரவில்லை; ஆனால், ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை முழுவதும் முறையான வழியில் செலவழிக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகத்தான் இதனைக் கொண்டுவருகிறேன்.

“அரிசன முன்னேற்றத்திற்காக சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையைவிட இவ்வாண்டு ரூ. 60 இலட்சம் அதிகமாகவே ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதை வரவேற்கிறேன்.

“இந்தப் பிரச்சினையை அடியோடு ஒழிப்பதற்குக் காங்கிரஸ் கட்சி அணுகுகின்ற முறையே தவறு. அணுகுகின்ற முறை மாத்திரம் அல்ல; செல்லுகின்ற பாதையும் மிகமிகத் தவறு. ஆண்டுதோறும் கோடிக்கணக்கான பணத்தை அரிசன முன்னேற்றத்திற்காக—தீண்டாமை ஒழிப்புக்காக இந்த அரசாங்கம் ஒதுக்கிவைத்து செலவு செய்துவருகிறது; என்றாலும் இவர்கள் அணுகுகின்ற முறையே தவறானதால், அந்தப் பணம் முழுவதும் பாழாக்கப்பட்டு வருகிறது.

“சர்க்கார் செய்கின்ற காரியங்கள் எல்லாம் தீண்டாமை ஒழிப்புக்கு—தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு வழிகோலுகிறதா என்று பார்த்தால், உண்மையில் வழிகோலவில்லை என்றே சொல்லவேண்டும். தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காக இவர்கள் சுவரொட்டிகளைப் போட்டார்கள்; இது மிகவும் நல்லதுதான். ஆனால் போட்ட சுவரொட்டிகள் முழுவதும் ஒட்டப்பட்டனவா என்று பார்த்தால், ஒட்டப்படவில்லை. ‘அதனால் ஏறக்குறைய பத்தாயிரம் ரூபாய் பாழ்பட்டு இருக்கிறது’ என்று கணக்குத் தணிக்கைக் குழு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

“அப்படிப்பட்ட சுவரொட்டிகள் ஏன் ஒட்டப்படவில்லை? அவை ஒட்டக்கூடாது என்று யார் தடுத்தது?—என்பதற்கான பதிலை நாங்கள் சொன்னால் அதைச் சிலர் தவறாகப் புரிந்துகொள்ளலாம்; தணிக்கை குழுவின் அறிக்கையிலேயே அது குறிப்பிடப்பட்டிருக்கிறது :—

‘As a result of public criticism against the motive of the poster, its display was stopped’

என்று பொதுப்படையாக இருக்கிறது.

“நான் கேட்கிறேன்—‘பப்ளிக்’ என்று சொல்லக்கூடிய அந்தப் பொதுமக்கள் யார்? அந்தச் சுவரொட்டிகளை ஒட்டக்கூடாது என்று அவர்கள் எதற்காக எதிர்த்தார்கள்? அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதகம் என்ன?—இதைப் பற்றி நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

“சர்க்கார் கட்சி செய்கின்ற காரியங்களை எல்லாம் எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் எதிர்க்கிறார்கள் என்பதாகச் சொல்லப்படுமே; அந்த எதிர்க்கட்சியில் இருக்கின்ற நாங்கள், அதை எதிர்த்தோமா? ‘சர்க்கார் நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது; தீண்டாமை ஒழிப்புக்காக — பாராட்டக்கூடிய நிலையில் நல்ல அறிவு விளக்கம் கொடுக்கும் சுவரொட்டிகளை ஒட்டச் செய்திருக்கிறார்கள்’ என்று எதிர்க்கட்சியினர் ஆதரித்த பின்பும், அதை அவர்கள் கைவிட்டதற்குக் காரணம் என்ன? எந்தப் பொதுமக்கள் அதை எதிர்த்தார்கள்? சமூகத்திலுள்ள எந்தத் தரப்பினருக்கு அது ஆட்சேபகரமாக இருந்தது?—‘அதனால் கெட்டுவிட்டோம்; பத்தாயிரம் பாழ்’ என்று சர்க்கார் சொல்லுவதற்கு!

“என்றைக்குமே ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவருவதானால் சமுதாயத்திலுள்ள ஒருசிலர்—வைதீகத்தை கைப்பிடியாகப் பிடித்துவைத்து இருப்பவர்கள்—அந்த நல்ல முன்னேற்றத்தைக் காணச் சகியாமல் எதிர்க்கத்தான் செய்வார்கள். ஒருசிலர் எதிர்க்கிறார்கள் என்பதற்காக, மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டத்தைக் கைவிட்டுவிட்டால் முன்னேற்றம் ஏற்படுமா? தீண்டாமை ஒழிப்புச் சாத்தியமாகுமா? வருகின்ற எதிர்ப்பை அஞ்சாமல் எதிர்த்து நின்று அந்தக் காரியத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இல்லையா?

“அப்படி எதிர்த்தவர்கள் யார் என்று நாங்கள் சொன்னால் ஆத்திரப்படலாம்; அவர்கள் யார் என்று இருபது ஆண்டுகளுக்கு முன்பாகவே காந்தியார் சொல்லியிருக்கிறார்; அவர்களைப் பார்த்து உத்தமர் காந்தியார் கேட்கிறார்—

“‘வெள்ளையர்களைப் பார்த்து ‘உங்கள் கையைக் கழுவிக் கொள்ளுங்கள்’ என்று சொல்லுவதற்கு முன்னர், இந்துக்களாகிய நம்முடைய இரத்தம் தோய்ந்த கைகளைக் கழுவிக் கொள்ள வேண்டாமா?’ என்று கேட்டுப் போந்தார்.

“சுதந்திரம் பெற்று பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது; இன்னமுமாவது நாம் நம்முடைய மாசுபடிந்த கரங்களை—இரத்தக் கைகளை கழுவிக் கொண்டிருக்கிறோமா?

“1954—55-ம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 75,000 என்று தெரிகிறது; ஆனால் அவ்வாண்டு செலவிடப்பட்ட தொகை ரூ. 17,775-தான் என்று அரிசன இலாகா அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாண்டிற்கு ரூ. 1,94,17,000 ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம்; ஆனால் 1954—55-ல் ஒதுக்கப்பட்ட ரூ. 75,000-த்தில், ரூ. 57,000 செலவழிக்கப்படவே இல்லையே! ஒதுக்கிய பணத்தை இவ்வாண்டிலாவது முழு அளவில் செலவிட்டுவிடுவார்கள் என்று எப்படிச் சொல்லமுடியும் என்பதை நினைக்கும்போது வேதனை அடைகிறோம்.

“தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காக, அரிசன நல இலாகாவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியின் மூலமாகவே ‘உதவி சேவக்’ என்றும், அவர்களுக்கு உதவியாக வேறு இரண்டு சேவகர்களையும், இப்படி மூன்று நான்கு பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கிராமங்களுக்குச் சென்று தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்யவேண்டும் என்பது அவர்களுடைய கடமை. அந்த நல்ல முறையை—கொள்கையை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த சேவகர்கள் எதைப் பிரச்சாரம் செய்கிறார்கள் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை; அமைச்சரே நேரில் சென்று பார்த்தால் தெரிந்துகொள்ளமுடியும். ‘தீண்டாமை ஒழிப்புக்காக காங்கிரஸ் சர்க்கார் கோடி கோடியாகப் பணம் ஒதுக்கிச் செலவிடுகிறார்கள்; ஆகவே, அடுத்த தேர்தலிலும் காங்கிரசுக்கே ஓட்டுப் போடுங்கள்’ என்று வரப்போகிற தேர்தலுக்கும் முடிந்த முடிவாக இவர்கள் இப்போது பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். அடிப்படை உரிமையைப் பெறும் உணர்ச்சியை வளர்க்கும் வகையில் அவர்கள் பேசி எவரும் இதுவரையில் கேட்டதில்லை. காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொல்லிக்கொண்டே அவர்கள் சம்பளம் பெற்றுவருகிறார்கள். உதவிசேவக்கும் சரி, அவர்களுக்கு உதவியாக இருக்கிற சேவக்குகளும் சரி—தீண்டாமை ஒழிப்புக்கு யாதொரு வகையிலும் பயன்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

“அதேபோல், ‘சேரிகள்’ என்ற பெயர் இருக்கக்கூடாது, காலனி என்று இருக்க வேண்டும் என்று சட்டம் போடப்பட்டிருப்பதாக—அல்ல அல்ல; தீர்மானித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியாகிய சென்னை 19வது வட்டத்தில் இருக்கக் கூடிய கூக்ஸ் ரோடு காலனியை, வாக்காளர் பட்டியல் புத்தகத்தில்கூட ‘கூக்ஸ் ரோடு—பறைச்சேரி’ என்றுதான் குறிப்பிட்டிருக்கின்றனர்; இன்னமும் கூட அதை, ‘காலனி’ என்று மாற்றி அழைக்கவில்லை. தேர்தல் காலத்தில்கூட நாங்கள் அதைச் சுட்டிக்காட்டியிருக்கிறோம்—இன்னும் அது திருத்தப்படவில்லை.

“அரிசன இலாகா என்பதன் மூலமாக இத்தனை பணமும் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது; இந்தப் பெயரை வைத்திருப்பதாலேயே ‘அரிசனங்களுக்கு என்று தனியாக ஒரு இலாகாவையும் ஏற்படுத்தி அவர்களின் முன்னேற்றத்திற்காக பல கோடி ரூபாய்கள் செலவு செய்ய ஒதுக்கியுள்ளனர்; நமக்கு அம்மாதிரி ஒன்றும் செய்யப்படவில்லையே’ என்கிற ஒரு பொறாமை உணர்வு மற்றவர்களுக்கு ஏற்படுவதற்கு வழிகோலப்படுகிறது. இந்தப் பொறாமை உணர்வைப் பிறரிடம் வளர்ப்பதற்காக இந்த இலாகா பயன்படுகிறதே தவிர, அரிசன மக்களுக்கு நல்ல முறையில் பயன்படவில்லை என்றே சொல்லவேண்டும்.

“இதற்கு முன்னால், ‘லேபர் கமிஷனர்’ அவர்கள் அரிசனத் துறை முன்னேற்றத்திற்காகவும், ‘டி. பி. ஐ.’ அவர்கள் பிற்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் சலுகைகள் கொடுத்து வந்தனர்; இப்போது இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ‘அரிசன் அப்லிப்ட்’ என்றுபெயர் வைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், குற்றபரம்பரையைச்

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை - தியாகராயநகரில் கழக முன்னணி வீரர்கள் முழக்கம்

தென்பகுதி இரயில்வே பகுத்தறிவாளர் மன்றத் துவக்க விழா

தென்பகுதி இரயில்வே ஊழியர் பகுத்தறிவாளர் மன்றத்தின் சார்பில் கடந்த 24-ந் தேதியன்று சென்னை—தியகராயநகரில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமை தாங்கினர்.

கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு, அளிக்கப்பட்ட கருத்துரைகளைக் கேட்டுச் சென்றனர்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மன்றத்தவர் வெகு சிறப்பாக செய்துவைத்தனர்.

தலைமை தாங்கிய தோழர் எஸ். இராகவானந்தம் அவர்கள் மன்றத்தின் நோக்கத்தையும், கூட்டத்தின் நோக்கத்தையும் எடுத்துரைத்தார். மன்றம் இரயில்வே தொழிலாளர்களிடை சமூகப் பணி ஆற்றுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டிருப்பதை அவர் விளக்கினர்.

அடுத்து தோழர் மு. கருணாநிதி அவர்கள், ‘மதிவளர் மன்றம்’ என்ற ஒரு அமைப்பையும் துவக்கி வைத்து சிறிது நேரம் பேசினர்.

பின்னர் அண்ணா அவர்கள் மன்றத்தின் தூய நோக்கத்தைப் பாராட்டிவிட்டு, தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகளின் சூதாட்டக் காயாக இருத்தலாகாது என்பதை விளக்கிச் சிறிது நேரம் பேசினர்.

“திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் தொழிற் சங்கத்தையும் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்து பயன்படுத்திக்கொள்வதில்லை. ஆனல் எந்தத் தொழிலாளர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்; எனெனில், தி. மு. கழகம் ஒரு தேசிய இயக்கமாகும். இந்த நல்ல பணியில் ஈடுபட்டிருக்கிற தி. மு. கழகம் தொழிலாளர்கள் சகல துறையிலும் முன்னேறுவதற்குப் பாடுபடத் தயங்காது. அந்த வகையில், இந்த மன்றம் தொழிலாளர்கள் நல்லறிவு பெறுவதற்கு உறுதுணையாகட்டும்”

என்றும் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

அடுத்து, தோழர் ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ. அவர்கள் தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றி விரிவாகப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“தொழிலாளர்கள் ‘நடமாடும் இயந்திரங்கள்’ என்று கருதப்பட்ட காலம் மறைந்துவிட்டது; இன்று எல்லோரும் தொழிலாளர்கள் முன்னேற்றம் பற்றி பேச வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

“தொழிலாளர்களை ஒன்று திரட்டி சங்கரீதியாக நாம் பாடுபடாமல் இருந்த நாட்களில், ‘இவர்கள் தொழிலாளர்களுக்காகப் பாடுபடுவதில்லை’ என்று மாற்றுக் கட்சியினர் பேசினர். இப்போது நாம் தேவையான இடங்களில் தொழிற்சங்கம் அமைப்பதென்று முடிவு செய்ததால், ‘இவர்கள் ஏன் தொழிலாளர் பக்கம் பேசுகிறார்கள்—புகுகிறார்கள்’ என்று கேட்கிறார்கள்.

“காங்கிரசார் ஐ.என்.டி.யு.சி. என்ற பெயரில் தங்களுடைய கட்சி நலன்களுக்காகத் தொழிற் சங்கங்கள் வைத்திருக்கிறார்கள்; கம்யூனிஸ்டுகள் தங்களுக்கென தொழிற்சங்கங்கள் வைத்திருக்கிறார்கள்; மேலும், அவைகளைத் தங்களுடைய ஏகபோக உரிமையென்றும் கருதுகிறார்கள். அவர்கள்தான், நாம் தொழிற்சங்கம் நடத்துவதற்கே அருகதையற்றவர்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஆனல் தி. மு. கழகம், நேரிடையாகத் தொழிற் சங்க இயக்கத்தில் கடந்த காலத்தில் ஈடுபட்டில்லாவிட்டாலும் அவர்களின் அறிவு வளர்ச்சிக்காக இடையறாது பாடுபட்டு வந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே, பகுத்தறிவு வளர்ச்சி தொழிலாளருக்குத் தேவையில்லை’ என்று கூறுகிறவர்கள்தான், நமது தொழிற்சங்க ஈடுபாடு குறித்து அச்சப்படுவார்கள்”

தொடர்ந்து பேசிய தோழர் சண்முகம் அவர்கள், சட்டமன்றத்தில் கழகத்தின் பணிகுறித்தும், தொழிலாளர்களுக்காக சட்ட மன்றத்தில் ஆற்றிவரும் பணி குறித்தும் விளக்கினர்.

பின்னர் தோழர் பொன்மலை—பாராங்குசம் அவர்கள் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு மட்டுமே பிரச்சினை இல்லையென்றும் நாட்டைப் பொறுத்த எல்லாப் பிரச்சினைகளிலும் அவர்களுக்கும் பங்கு உண்டென்றும் கூறினர்.

இறுதியாக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தி. மு. கழகத்தின் சமுதாயக் கொள்கைகளை விளக்கி அரியதோர் கருத்துரை வழங்கினர்.

அவர் தமது பேருரையில் தொழிலாளர் சமுதாயத்தின் ஈடேற்றத்திற்காக இடையறாது பாடுபட்டுவரும் தி. மு. கழகம் தான் அவர்களுக்குச் சரியான வழிகாட்ட முடியும் என்று விளக்கினர்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிது முடிவடைந்தது. (ந. கி.)

‘திறமை’யின் எல்லை!

இப்போது விலைவாசிகள் உயர்ந்த நிலையிலேயே உள்ளதாம்! கட்டுப்படியாகக்கூடிய அளவுக்குக் குறைவாக விலைகள் இறங்கினல்தான் குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க முடியுமாம்!

மக்கள்சபையில் உணவு அமைச்சர் ஜெயின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தென்பகுதி இரயில்வே பகுத்தறிவு மன்றம்

24—7—57 காலை 10 மணியளவில் சென்னை-சைதாப்பேட்டை அன்னதான மன்றத்தில், தென்பகுதி இரயில்வே பகுத்தறிவு மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, திருவண்ணமலை, விழுப்புரம், மதுரை, திருச்சி, செங்கற்பட்டு, சென்னை, மாயவரம், மண்டபம், திருநெல்வேலி மற்ற வெளியூர்களிலிருந்தும் பல இரயில்வே தொழிலாளர்கள் வந்திருந்தனர். தோழர்கள் எஸ். இராகவானந்தம், பொன்மலை-பாராங்குசம் ஆகியோர் பகுத்தறிவு மன்ற வளர்ச்சியைப் பற்றி விளக்கம் தந்த பின்னர், இவ்வாண்டிற்கு, கீழ்க்கண்ட தோழர்கள் நிர்வாகிகளாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர்: எம். அய்யையா; நிர்வாகத் தலைவர்: எம். நடராசன் (மதுரை); பொதுச்செயலாளர்: பொன்மலை-பாராங்குசம்; நிர்வாக செயலாளர்: கா.மு. சாமிநாதன்; மற்றும் பதின்மூன்று பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்று மாலை பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் தேநீர் விருந்து நடைபெற்றது.

தமிழ்ப் பேரறிஞர்களுக்குப் பாராட்டும் பணமுடிப்பும்

சேலம், ஜூலை 31—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழி நூல் வாசகராகப் பணியாற்றும் தமிழ்ப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர், செந்துறை உயர்நிலைப் பள்ளி தலைமைத் தமிழ்க் கணக்காயனர் வை. பொன்னம்பலனர் ஆகிய இருவரையும் பாராட்டி சேலம் தமிழ்ப் பேரவை சார்பில் வெள்ளிப் பட்டயங்களும், ஒவ்வொரு பேராசிரியருக்கும் ரூ. 500 கொண்ட பணமுடிப்பும் அளித்து பாராட்டப்பட்டனர்.

28—7—57 காலை சேலம் மாவட்ட ஆட்சி மன்ற மண்டபத்தில் இந்த பாராட்டு விழா சேலம் தமிழ்ப் பேரவை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. தோழர்கள் பாரதிதாசன், கெசபதிஎம்.எல்.சி. முதலியவர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவிற்கு பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமை வகித்தார்.

சேலம் தமிழ்ப் பேரவை சார்பில் சேலம் கல்லூரி பேராசிரியர் திரு. டி. வி. சொக்கப்பா எல்லோரையும் வரவேற்றுப் பேசினர். தேவநேயப்பாவாணர், பொன்னும்பலனர் ஆகிய இருவருடைய சேவையைப் பெரிதும் சொக்கப்பா பாராட்டிப் பேசினர்.

வெள்ளிப் பட்டயங்கள்

இந்தக் காலத்தில் நினைத்தவர்களுக்கெல்லாம் பொன்னடை போர்த்தப்பட்டு வருவதால் பொன்னடை போர்த்தும் விழாவின் மதிப்பு குறைவுற்று வருவதாக பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கூறினர்.

ஞா. தேவநேயப்பாவாணர் வை. பொன்னம்பலனர் ஆகிய இரு தமிழ் அறிஞர்களுக்கும் சேலம் தமிழ்ப் பேரவை சார்பில் அளிக்கப்பட்ட வெள்ளிப் பட்டயங்களையும், ரூ. 500 கொண்ட பணமுடிப்புகளையும் விழாத் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் வழங்கினர்.

இரு அறிஞர்களின் சேவையைப் பாராட்டி சேலம் இரத்தின சாமிபிள்ளை, கெசபதி எம்.எல்.சி. மற்றும் பலரும் பேசினர். (ந-தி.)

சென்னை பி. & சி. ஆலை தொழிலாளர் சங்கம்

நிர்வாகிகள் தேர்வு

சென்னை, ஜூலை 30—

29—7—57-ல் நடைபெற்ற சென்னை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் மறைந்த டாக்டர் பி. வரதராசுலு நாயுடு அவர்கள் பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆற்றிய அரிய சேவைகளைப் பாராட்டி ஒரு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தபால்—தந்தி இலாகா ஊழியர்களுக்கு மத்திய அரசாங்கம் இழைத்திடும் அநீதியைக் கண்டித்தும், தபால்-தந்தி ஊழியர்களுக்கு முழு ஆதரவைத் தெரிவித்தும் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

சென்னை தொழிற் சங்கத்திற்கு 1957—58-ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—தலைவர் : எஸ். சி. சி. அந்தோணிப்பிள்ளை எம்.பி.; துணைத் தலைவர்கள் : சாமுண்டீஸ்வரன், இராசன், துரைசாமி; பொதுச் செயலாளர் : எஸ். பக்கிரிசாமிப் பிள்ளை எம்.எல்.ஏ.; கூட்டுச் செயலாளர் ; சி. கே. நாராயணன்.

சென்னை-மயிலையில் அண்ணா தந்த இலட்சிய விளக்கம்

சிந்தனையாளர் கழகப் பொதுக்கூட்டம்

சென்னை—மயிலாப்பூர் சிந்தனையாளர் கழகத்தின் சார்பில் 26-7-57-ல் மைலாப்பூர் சித்திரகுளம் அருகே ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஏராளமான பெண்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டுவந்திருந்தனர்.

தோழர் சென்னகேசவலு முன்மொழிய தோழர் வெங்கடராமர் வழிமொழிய தோழர் ந. வேதாசலம் தலைமை தாங்கினர்.

தலைவர், சிந்தனையாளர் கழகத்தின் நோக்கத்தைக் குறிப்பிட்டு, 1951-லிருந்து கழகம் ஆற்றிவரும் பணி குறித்து விளக்கினர்.

அடுத்து தோழர் தம்பிதுரை சிறிதுநேரம் பேசினர்.

பின்னர் தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் தி. மு. கழகமும் சிந்தனையாளர் கழகமும் ஒன்றுபட்டு தேர்தலில் வேலை செய்ததைப் பாராட்டிவிட்டு இன்றைய நிலையில் சிந்தனையாளர்கள் தமிழகத்தின் உரிமையையும், நல்வாழ்வையும் மனதில் கொள்வார்களானல் அவர்கள் தி. மு. கழகத்தின் சிந்தனை வழியைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழி இருக்க முடியாது என்று விளக்கினர்.

அடுத்து தோழர் ஜேசுபாதம் அவர்கள் சிறிதுநேரம் பேசியதும், தோழர் கண்ணதாசன் அவர்கள் சிந்தனை வளர்ச்சி குறித்துப் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் சிந்தனையாளர் கழகத்தின் தூய நோக்கத்தைப் பாராட்டிவிட்டு, இன்றைய அரசியல் நிலைகளையும், சட்டசபையில் கழகம் ஆற்றிவரும் பணியையும் குறித்து விரிவுரையாற்றினர்.

அண்ணா அவர்களுக்கும், இதர தோழர்களுக்கும் கழகத்தின் சார்பிலும், பல வேறு மன்றங்களின் சார்பிலும் ஏராளமான கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. (ந. கி.)

மின்சார வினியோக ஊழியர்கள் கூட்டம்

சேலம், ஜூலை 28—

சேலம்—ஈரோடு மின்சார விநியோக நிறுவனச் சிப்பந்திகள் பொதுக் குழுக் கூட்டம் தோழர் கே. ராமன் நாயர் தலைமையில் நடைப்பெற்றது.

தபால்—தந்தி இலாகா சிப்பந்திகளின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்தும், வேலை நிறுத்தத்தைத் தவிர்க்க அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படியும், இரண்டாவது சம்பளக் கமிஷனை ஏற்படுத்துமாறும் இந்தியப் போராசை கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியா முழுவதிலும் சர்க்கார் நிர்வாகத்திலும், தனிப்பட்ட கம்பெனிகளின் நிர்வாகத்திலுமுள்ள மின்சார விநியோக சிப்பந்திகளின் சம்பளங்களைத் திருத்தி அமைக்க சம்பள போர்டு ஒன்றை நிறுவுமாறு மத்தியப் போரசைக் கேட்டுக்கொண்டு மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மின்சார இலாகா சிப்பந்திகளுக்குக் குடியிருக்க வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று மின்சார இலாகா அமைச்சர் செய்த சிபாரிசை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றுமாறு மாகாண மின்சார இலாகா போர்டாரை கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ந. கி.)

‘சாகாவரம்’ — நாடகம்

28—7—57 மாலை சென்னை மியூசியம் தியேட்டரில், தோழர் வே. கபிலன் தீட்டிய ‘சாகாவரம்’ என்னும் சமூக நாடகம், தோழர் கண்ணதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது அவர், நாடகத்தை வெகுவாகப் பாராட்டினர். சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட நாடகங்கள் நாட்டிலே மிகுதியாக வளர்ந்ததற்குக் காரணம் அண்ணா அவர்கள்தான் என்று குறிப்பிட்டுவிட்டு, அமெச்சூர் நடிகர்களைப் பாராட்டினர்.

மறைந்த மாவீரன் தாளமுத்துவின் வாலாற்றைக் கொண்ட இந்த நாடகம் மிகவும் சிறப்பாகவே அமைந்திருந்ததென்றும், மேடைகளின் மூலமாகப் பேசி விளக்குவதைக் காட்டிலும், இத்தகைய நாடக மூலமாக விளக்குவதே நல்லது என்றும் குறிப்பிட்டார். நண்பர் வே. கபிலன் அவர்களின் இம்முயற்சி பாராட்டத்தக்கது—போற்றக் கூடியது என்றார்.

மேற்படி நாடகத்தையும், அதன் ஆசிரியரையும், பயிற்சியளித்தவரையும் பாராட்டி தோழர்கள் அ. மு. பரமசிவானந்தம், ஏ. கே. வில்வம், இரா. செழியன், அ. பொ. அரசு, க. அறிவழகன் ஆகியோர் பேசினர்.

இறுதியில் தோழர் கண்ணதாசன் அவர்கள், தோழர் வே. கபிலன் அவர்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி மலர்மாலை அணிவித்தார்.

பயிற்சியாளர் எம். டி. எஸ். விநாயகம் அவர்கள் இந்த நாடகத்தோடு 91 நாடகங்களுக்குப் பயிற்சி அளித்திருப்பதைக் கண்டு பாராட்டி மலர்மாலை சூட்டினர்.

நாடக விழாவில் அண்ணா அவர்களும், தோழர்கள் ப. வாணன், மா. கி. தசரதன் ஆகியவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கம்யூனிஸ்டு எதிர்ப்பு இராணுவம்?

சீனத்தில் உருவாக்க முயற்சித்தவர்கள் கைது!

ஹாங்காங், ஜூலை 30—

சீன விடுதலைக் கட்சி என்ற பெயரில், ஒரு இரகசியக் கட்சியின் தலைவர்கள் மஞ்சள் கடலில் உள்ள ஒரு துறைமுகத்தில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இவர்கள், கம்யூனிஸ்டு எதிர்ப்பு இராணுவம் ஒன்றை உருவாக்க முயற்சித்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள், தங்கள் இயக்கத்தை பீகிங், ஷாங்காய், மற்றும் ஹாங்காங் போன்ற இடங்களுக்கும் விரிவுபடுத்த முயற்சித்தனராம்!

இவர்கள், கடந்த ஜூன் 15-ந் தேதியன்று கைதாயினர் என்று கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இரு தலைவர்களும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டனர் என்றும், இவர்களிடமிருந்து எதிர்ப்புரட்சி சம்மந்தகான துண்டு விளம்பரங்களும் காகிதங்களும் கைப்பற்றப்பட்டன என்றும், இவர்கள் சீனவைவிட்டு வெளியேறி அமெரிக்க உதவியோடு இந்தக் கம்யூனிஸ்டு எதிர்ப்பு வேலைகளைச் செய்யத் திட்டமிட்டிருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

எகிப்தில் அசுவான் என்ற இடத்தில், நைல் நதிமீது அணை கட்டுவதற்கு உதவியளிக்குமாறு ஜப்பானை எகிப்து கேட்டதாகவும் இக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

சென்னை-மயிலையில் அண்ணா முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

" 'சர்க்காரிடமிருந்து மானியப் பிச்சை கேட்டு நிற்கும் 'கார்ப்பரேஷன்' நிலையில்தான், இன்று மாநிலங்கள் இருக்கின்றன...மத்திய சர்க்காரிடத்தில் அளவுக்கு மீறிய அதிகாரம் குவித்து வைக்கப்படுகிறது...இதனால் பிரிந்து போக வேண்டும் என்ற எண்ணம் தோன்றி மாநிலங்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டால், அவற்றைப் பிடித்திழுத்து ஒன்று சேர்க்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள், மத்தியில் இருக்கமுடியாது போய்விடும்' என்று ஆச்சாரியார் அண்மையில் எழுதியிருக்கிறார். ஆங்கிலத்திலும், தமிழிலும் அவர் இதனை எழுதியிருப்பதற்குக் காரணம், தன் கருத்தை யாரும் தப்பர்த்தம் செய்துகொள்ளக் கூடாது என்பதற்குத்தான் !

" குன்று ஒன்றின்மேல் கிழவர் ஒருவர் சிறுவனுடன் நிற்கிறார்; 'தூரத்தில் ஏதோ கருப்பாகத் தெரிகிறதே' என்கிறான் சிறுவன்; கிழவரோ, 'ஏதுமில்லை' என்கிறார்; ஆனால் பையனோ, மீண்டும் பார்த்துவிட்டு, 'ஏதோ கூட்டமாக வந்து கொண்டிருக்கிறது' என்கிறான்; கிழவரோ, 'அதெல்லாம் ஒன்றும் இல்லை' என்கிறார்; தூரத்தில் வந்து கொண்டிருந்தது குன்றை நெருங்க நெருங்க, பையன் 'அது ஒரு ஆட்டுமந்தை' என்கிறான்; நெருங்கி வந்ததும், அது ஆட்டு மந்தைதான் எனத் தெரிந்ததும், பையன் முதுகில் தட்டித் தந்து, 'ஆமாம்; ஆட்டு மந்தைதான்' என்கிறார் பெரியவர்! அப்போது பையன் எவ்வளவு களிப்படைவானோ, அவ்வளவு களிப்படைகிறது தி. மு. கழகம்—ஆச்சாரியார் தெரிவித்துள்ள இந்தக் கருத்து கண்டு! இந்தக் கருத்து இன்று காற்று எந்தப் பக்கம் அடிக்கிறது என்பதைக் காட்டவில்லையா?

" ஆச்சாரியார் இப்படிக் கூறும்போது, 'அவர் எங்களின் மாஜி பகைவர் — இன்றைய நண்பர்' என்று கூறுகிறது அரசியல் உலகம். ஆனால், அவரைப் பகைத்துக் கொள்ளும் அளவிற்கு நாங்கள் திறம் படைத்தவர்களும் அல்ல; அல்லது, அவரை நண்பராகப் பெறும் அளவிற்கு நாங்கள் ஒன்றும் உயர்ந்தவர்களும் அல்ல!

"ஆனால் நான், 'ஆச்சாரியார் கூறுவதற்கு அதிக அர்த்தம் உண்டு' என்று ஏன் கூறுகிறேன் என்றால் அவர்தான், 'பாகிஸ்தான் — பாதகஸ்தான்; அது கூடாது—ஆகாது; பாரதமாதாவைத் துண்டு போடுவதா?' என்று, எதிர்ப்பு வலுத்திருந்த நேரத்தில்—தானேமுன்புஅப்படி எதிர்த்திருந்தபோதிலும், 'பாகிஸ்தானைக் கொடுத்துவிடுங்கள்' என்று பின்னர் கூறினார்; அந்த அளவிற்கு அவருக்குத் தெளிவும் உள்ளத் துணிவும் இருந்தது. அதனால்தான், 'அவர் இப்போது டெல்லி சர்க்காரின் போக்கு பற்றிப் பேசுவதில் அதிகப் பொருள் உண்டு' என்று நான் கருதுகிறேன். 'ஆண்டவனே! ஆச்சாரியாருக்கு நீண்ட ஆயுளும், திடமான உடலும், அதைவிடத் திடமான உள்ளமும் தாரும்' என்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

"அவர் தன் காலத்திலேயே இந்தத் தென்னாட்டிற்கு, வடநாட்டின் பிடிப்பிலிருந்து விமோசனம் தேட வழி செய்வாரானால், அது எங்களுக்கு அல்ல—நாட்டுக்கு நல்லது.

"நான் மாணவனாயிருந்த காலத்தில் எனக்கு ஆசிரியராயிருந்த பொருளாதாரப் பேராசிரியர் டாக்டர் பி. ஜே. தாமஸ், சில நாட்களுக்கு முன்னர்தான் பேசியிருக்கிறார்—'தென்னாட்டு மாநிலங்கள் நான்கும் ஒன்றுக்கொன்று ஒன்றி வாழத்தக்க ஒருமைப்பாடு கொண்டவை; இந்த நான்கு மாநிலங்களும் இந்தியாவின் ஏஞ்சிய பாகத்திலிருந்து வேறுபட்டவை' என்று! இவர் என்ன, திராவிட முன்னேற்றக் கழகத்தவரா? காங்கிரஸ்காரர்கூட இல்லை! அரசியல் கலப்பில்லாதவர்! பிரபலமான பொருளாதார நிபுணர்! பேசிய இடம்கூட, விவேகானந்தா கல்லூரி என்று கருதுகிறேன்.

" நாம் சொல்லுவது என்ன? நான்கு மொழிவழி அரசுகள்—தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கன்னடம்—என்ற இவை ஒன்றாகச் சேர்ந்து அமைத்துக்கொள்ளும் ஒரு கூட்டாட்சி தேவை' என்பதுதானே!

" 'இந்த நான்கு மாநிலங்களும், இயற்கை அமைப்பால்—பண்பாட்டினால் வடநாட்டிலிருந்து வேறுபட்டவை' என்கிறோம். இதைத்தான் அந்தப் பொருளாதார ஆசிரியரும் கூறியிருக்கிறார்.

" அது மட்டுமல்ல; நாம், 'வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது' என்னும்போது சிலர் கோபப்படுகிறார்கள்; ஆனால், இந்தப் பொருளாதாரப் பேராசிரியர், இதனை மேலும் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

" 'ஐந்தாண்டுத் திட்டங்கள் போன்ற அபிவிருத்தித் திட்டத்தினால், வடக்கே, மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது; அதனால் விலைவாசிகள் ஏறுகின்றன; இங்கே நாம், பண்டங்களுக்கு அநியாய விலை தரவேண்டியவர்களாயிருக்கிறோம்' என்றும் அவர் விளக்கியிருக்கிறார்.

" 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது—இந்தியா ஒன்றாக இருப்பதால்! வடக்கே அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன—இந்தியா ஒன்றாக இருப்பதால்! தென்னாட்டு மாநிலங்கள் நான்கும் ஒன்றுக்கொன்று ஒன்றிவாழும் தன்மையன' என்றெல்லாம், தாமஸ் போன்ற பொருளாதாரப் பேராசிரியர்களும், ஆச்சாரியார் போன்ற அரசியல் அறிஞர்களும் கூறியாகிவிட்டது. இன்னும் யார் சொல்லவேண்டும்?

"பாரதம் ஒன்று என்பவர்கள் ஏன், ஆசியாவை ஒன்று என்று கூறவில்லை? இன்று பாரதம் மட்டும் கையில் கிடைத்திருக்கிறது; அதனால் ஒன்று என்கிறார்கள். ஆசியா முழுவதும் கிடைத்தால், அது முழுவதும் ஒன்று என்பார்கள்; கிடைக்கவில்லை—அதனால்தான் கூறவில்லை என்பதைத் தவிர, வேறு என்ன?

"நாம், தனிச் சுதந்திர நாடாக இருக்க வேண்டும் என்று கூறுவதினால், வடநாட்டுடன் எப்போதும் மோதிக்கொள்ள வேண்டுமென்பதல்ல!

"அண்மையில் பண்டிதர் ஐரோப்பா சென்று வந்தார்; அங்கே இரு நாடுகள்—நார்வே, ஸ்வீடன் என்பவை; அந்த இரு நாடுகளும், சமீப காலம்வரை ஒன்றாக இருந்தவை—'ஸ்காண்டிநேவியா' என்று பெயர் பெற்றிருந்தவை; இன்று தனித்தனியாக இருக்கின்றன. அந்த நாடுகளிடத்தில் போய், 'ஏன் தனித்தனியாக இருக்கின்றீர்கள்; ஒன்றாக விடுங்களேன்' என்று நேரு பண்டிதரைச் சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம்; சொல்லமாட்டார்!

" 'நமது நாடு சுதந்திர நாடானால் மிகச் சிறியதாயிருக்குமே' என்று சிலர் பேசுகிறார்கள். ஒரு நாட்டின் பெருமை, அந்த நாடு சிறிதா—பெரிதா என்பதைப் பொறுத்தது அல்ல; அந்த நாட்டு மக்கள் நல்லவர்களா என்பதைப் பொறுத்ததுதான்! பண்டிதருக்கு இது தெரியாதா என்றால், நன்றாகத் தெரியும்; என்றாலும், நமது உரிமை முழக்கத்தை அவர், 'சிறுபிள்ளைத்தனமானது' என்று கூறினார்.

ஆனால் அதே நேரு பண்டிதர், நம்மை மட்டுமல்ல—நாகர்களையும் 'சிறுபிள்ளைத்தனமானவர்கள்' என்றுதான் கூறினார்; ஆனால் இன்று......!

" நாகர்களை, 'தலைகளை வெட்டும் காட்டுமிராண்டிகள்' என்று கூறுவார்கள், ஒருகாலத்தில்! அவர்களில் யாராவது வீரன் என்று பெயரெடுக்க வேண்டுமானால் அவர்கள், வெட்டி வீழ்த்திய தலைகளின் எண்ணிக்கையைக் காட்டித்தான் வீரனாக முடியுமாம், ஒருகாலத்தில்! அவர்களில் பலர் இன்று அசாம் பல்கலைக் கழகத்தில் பயிலுகிறார்கள்; அந்த நாகர்கள் இன்று சுதந்திரம் கேட்கிறார்கள். 1947-லிருந்து இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது. அவர்களுக்கு 'பிசோ' என்றொரு பெருந்தலைவன் கிடைத்திருக்கிறான். தாய்நாட்டின் விடுதலைக்காக அவன், ஜப்பானியர்கள் அந்தப் பக்கம் வந்துபோன நாட்களில் விட்டுச்சென்ற ஆயுதங்களை வைத்துக்கொண்டு, குகைகளை பாசறைகளாக்கி, வாலிபர்களை வீரர்களாக்கிப் போராடி வருகிறான். மூன்றாண்டுக்காலமாகப் போராட்டம் தீவிரமாகியிருக்கிறது; அவர்களை அடக்குவதற்காக டெல்லி சர்க்கார், ஜெனரல் திம்மையா தலைமையில் இராணுவத்தையே அனுப்பிவைத்தது. 'பிடித்துவிட்டோம்—பிடிபட்டு வருகிறார்கள்—கலகத்தை அடக்கி விட்டோம்' என்கிறார்கள்; ஆனால் இன்று, 'பிசோ'வின் தலைக்கு ரூ. 10 ஆயிரம் விலை வைத்திருக்கிறது, டெல்லி சர்க்கார்! 'காட்டுமிராண்டிகள்' என்று நாகர்களைச் சொல்லிவிட்டு, டெல்லி சர்க்காரின் நாகரீகவான்கள் 'பிசோ'வின் தலைக்கு 10 ஆயிரம் ரூபாய் பரிசு என அறிவிக்கிறார்கள். பிடிபட்டவர்கள் எல்லாம், 'பிசோ'வால் அனுப்பப்பட்டவர்களோ என்றுகூட நான் ஐயப்படுகிறேன். மூன்றாண்டுகள் முயன்றும், கிளர்ச்சியை அடக்கமுடியவில்லை; விளைவு என்ன?

" பண்டிதர் பாராளுமன்றத்தில் பேசுகிறார்—'போதுமான அளவுக்கு மாகாண சுய ஆட்சி தருகிறேன்; முடிந்த அளவு தருகிறேன்; அதற்காக அரசியல் சட்டத்தையே திருத்தவும் தயாராக இருக்கிறேன்' என்று! இதற்கு 'அமளி நிற்க வேண்டும்; ஆயுதத்தைக் கீழே போடுங்கள்' என்று நாகர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

" எதனை, 'சிறுபிள்ளைத்தனம்' என்று கூறினாரோ, அதற்கு இணங்க முன்வருகிறார் பண்டிதர்—இறங்கி வருகிறார்!

" 'அடக்கி விடுவோம்' என்று ஆரூடம் சொன்னவர்கள், இன்று இறங்கிவருகிறார்கள்; அந்த அளவுக்கு, 'பிசோ' கிளப்பிய தேசியக் கனல், இன்று குன்றின் மேல் நின்று ஒளி விடுகிறது. அந்தக் கனலிலே, டெல்லியின் அசமந்தமும் ஆணவமும் கருகி விடுகின்றன.

" 'பிசோ'வின் சிறுபிள்ளைத்தனத்திற்கு பண்டிதர் செவி சாய்க்கிறார்!

"பண்டிதரின் பண்பே-மனதில் ஏற்படும் ஆசையின் காரணமாகத் தீவிரமாயிருப்பார்; பின், நியாயங்களை உணர்ந்தினால் அதற்கு இணங்குவதுதான்; எனவேதான், அவரிடத்திலே நமக்கு நம்பிக்கை இருக்கிறது என்கிறோம்."

மலபாரில் ஒரு எஞ்சினீயரிங் கல்லூரி

கேரள மாநிலத்தில் மலபார் மாவட்டத்தில் ஒரு எஞ்சினீயரிங் கல்லூரி துவங்குவது பற்றி டெல்லி சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக மக்கள்சபையில் கல்வி இலாகா மந்திரி டாக்டர் கே. ஸ்ரீமாலி தெரிவித்திருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை-27-வதுவட்டம்
எடப்பாளையம் தெருவில்
(ஒற்றவாடைக் கொட்டகை அருகில்)
கழக முதலாண்டு விழா
3—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஆ. இராசன்
பேசுவோர்:
அண்ணா
என். வி. நடராசன்
கருணாகரன்

★

தோப்புத்துறை:
2—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : தா. சிவசுந்தரம்
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
மு. செங்குட்டுவன்
சிவ. கனகசுந்தரம்

★

கீழ்வழித்துணையாங்குப்பம்:
சந்தை வெளியில்
2—8—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : நா. நடராசன்
பேசுபவர் : அண்ணா

டில்லியின் துரோகச் செயல் ஆரம்பம்!

இந்தூர், ஆக. 1—

அஞ்சல் — தந்தி ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளைப் பல ஆண்டுகளாக ஏற்க மறுத்துவரும் மத்திய அரசாங்கம், அவர்களை வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தூரத்தியதோடு நிற்காமல், அவர்களின் வேலைநிறுத்தத்தை முறியடிக்கும் இழி செயலிலும் ஈடுபட்டுள்ளது.

ஆசிரியர்கள் உள்பட மத்தியப் பிரதேச மாநில அரசாங்க ஊழியர்கள் இன்றுமுதல் அஞ்சல்—தந்தி நிலையங்களுக்குச் சென்று பயிற்சிபெற வேண்டுமாம்!

வேலைநிறுத்தத்தினால் ஏற்படக்கூடிய நிலைமையைச் சமாளிப்பதற்குத் தயாராக இருக்குமாறு எல்லா மாநில சர்க்கார்களையும் மத்திய சர்க்கார் கேட்டுக் கொண்டிருக்கிறதாம்!

★

7000 பேர் அனுதாப வேலைநிறுத்தம்?

பம்பாய், ஆக 1—

அஞ்சல் — தந்தி ஊழியர்கள், தங்கள் கோரிக்கைகளைப் பெறுவதற்கு வேலைநிறுத்தம் செய்யவேண்டிய நிலைக்கு அரசாங்கம் தூரத்தினால், இந்திய அரசாங்கக் கடற்படை துறைமுகத்தின் 7,000 தொழிலாளர்களும் அனுதாப வேலைநிறுத்தம் செய்வார்கள் என அந்த சங்கத்தின் நிர்வாகக் குழு அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

மதம் பலிபீடமே!

கெய்ரோ, ஜூலை 31—

மெக்கா இஸ்லாமிய மதத்தினருக்குப் புனிதமான இடம். அங்கு சென்ற இளந்தம்பதிகளிருவர் காதல் லீலை புரிந்தனராம்! இந்த உண்மையை அவர்கள் மதத் தலைவர் முல்லாவிடம் மறைக்கவோ, மறுக்கவோ விரும்பவில்லையாம்.

உண்மையைக் கூறிய அந்த இளந்தம்பதிகள் தண்டனைக்குரியவர்கள் என்று முல்லா தீர்ப்பளித்து, முதலில் தானே ஒரு கல்லை அவர்கள்மீது எறிந்தாராம்; பிறகு அரேபிய இராணுவத்தினர் கற்களை எறிந்து அந்தக் காதலர்களைக் கொன்றனராம்!

மாறுதல் இல்லையாம்!

சென்னை நகர தொழிலாளர் வாழ்க்கைத்தரப் புள்ளி 1957 ஜூலை 20-ந் தேதியுடன் முடிவான வாரத்தில் 377 ஆக இருந்தது; முந்திய வாரப் புள்ளியில் மாறுதல் இல்லை.

சத்தியவாணிமுத்து விளக்கம்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சேர்ந்தவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் 'எலிஜிபில் கம்யூனிட்டி'—'தகுதி உடையவர்' என்று சொல்லி, தாழ்த்தப்பட்ட மக்களோடு பல சலுகைகள் காட்டப்பட வேண்டும் என்றிருப்பதனால், அரிசனங்கள் வாழ்க்கையில் இன்றும் அடித்தளத்திலேயே இருக்கிறார்கள். இவர்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகை பிற்பட்ட சமூகங்களுக்கும் சேர்த்து செலவிடப்படுகிறது. அந்தந்த வகுப்பினர்களின் முன்னேற்றத்திற்கென ஒதுக்கப்படும் தொகையை தனித்தனி இனமாகப் பிரித்து வைத்தால் ஓரளவுக்கு நன்மை ஏற்படும் என்று எண்ணுகிறேன். உண்மையிலேயே இம்மாதிரி செய்வதனால் ஓரளவுக்குத் தீண்டாமையையும் ஒழிக்க முடியும்.

"உதாரணமாக, அரிசன மாணவன் ஒருவன் பள்ளியில் சேர வேண்டுமானால், அரிசன இலாகா மூலமாக தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் சலுகையைப் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. 'அரிசனம்' என்று சொன்னால், 'கிருத்துவ அரிசனனா, அல்லது ஆதிதிராவிடனா' என்றுகூட கேட்கப்படுகிறது. ஆதிதிராவிடன், தாழ்த்தப்பட்டவன் என்று நிரூபிக்க 'கம்யூனிட்டி சர்டிபிகேட்' வாங்க வேண்டி பலபேர்களிடம் செல்ல வேண்டியிருக்கிறது; அப்படியும் உரிய காலத்தில் இவைகள் கிடைப்பதில்லை. 'ஸ்காலர்ஷிப்' பாரங்களைக்கூட பள்ளிக்கூடங்களிலிருந்து ஒரு அணா அல்லது இரண்டணா கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. சரியான முறையில் அந்த 'பாரம்'கள் கிடைப்பதில்லை! மற்றும் சில துறைகளிலும்கூட இது போன்ற நிலைமை இருக்கிறது.

" தங்கும் விடுதிகளில் இடம் கூட பிற்பட்ட வகுப்பினருக்குத்தான் என்று சொல்லப்படுகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு அங்கு இடம் கிடைப்பதில்லை. உதாரணமாக எட்டியப்ப நாயக்கர் தங்கும் விடுதியில், 'தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடம் கிடையாது' என்கிறார்கள். இந்த விடுதியில் பிற்பட்ட வகுப்பினருக்குத்தான் இடம் கிடைக்கிறது என்று சொல்லும்போது, இதை 'புகார்' என்ற முறையில் எண்ணாமல் கவனிக்குமாறு கோருகிறேன்."

திருப்பூர் தனலட்சுமி எஸ்.ஆர்.சி., ஆலர் தி. மு. கழக ஆலைத் தொழிலாளர்களுக்கு:

★

2—8—57 வெள்ளி காலை 10-மணிக்கு நகர வழிப்போக்கர் விடுதியில், மேற்படி ஆலைத் தொழிலாளர்கள் அமைப்புக் கூட்டம் ஒன்று நடைபெறும். அதுபோது அமைப்புக் குழுத் தேர்தல் நடைபெறும்.

சென்னையில் தடை உத்திரவு நீடிக்கிறது

சென்னை, ஆக. 1—

சென்னை நகரில் போலீஸ் கமிஷனரின் முன் அனுமதியில்லாமல் கூடவோ, கூட்டம் நடத்தவோ இருந்துவரும் தடை உத்திரவு ஆகஸ்டு 1-ந் தேதி முதல் 14-ந் தேதி முடியும்வரை நீடிக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அருசிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்[illegible]